**OS. 38/2023**

**நாள். 24.03.2026**

**வா.சா. 3 – பட்சிராஜா**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

வாதி எனக்கு என்ன உறவு என்றால் ஊர்க்காரர். 1ம் பிரதிவாதி ராணி எனக்கு என்ன உறவு என்றால் ஊர்க்காரர். வாதியின் சகோதரர் முனியசாமி 1ம் பிரதிவாதி ராணியை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் மகள் 2ம் பிரதிவாதி வனிதாவை எனக்கு யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் சகோதரர் முனீயசாமி 1ம் பிரதிவாதியை திருணம் செய்து கொண்டார் என்றும், 1ம் பிரதிவாதிக்கும், முனியசாமிக்கும் பிறந்த குழந்தை வனிதா என்றும், அந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், நான் வாதிக்கு ஆதரவாக 1ம் பிரதிவாதிக்கும், முனியசாமிக்கும் திருமணமாகவில்லை என்றும், 1ம் பிரதிவாதிக்கும், முனியசாமிக்கும் பிறந்த குழந்தை வனிதா இல்லை என்றும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முனியசாமி நிலத்தை 1, 2 பிரதிவாதிகள் உழுதபோது வாதி ஞானசௌந்தரி உழக்கூடாது என்று கேணிக்கரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அப்போது வாதிக்கு ஆதரவாக காவல் நிலையத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. நான் வாதி ஞானசௌந்தரிக்கு ஆதரவாக காவல் நிலையத்திற்கு வந்து பிரதிவாதிகள் உழுவதை தடைசெய்யமாட்டோம் என்று காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்து வந்தோம் என்றால் சரியல்ல. இறந்துபோன முனியசாமி பெயரில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் கிரைய சொத்து 5 ஏக்கரும், பூர்வீக சொத்து 3 ½ ஏக்கரும் இருக்கும். வாதி முனியசாமியின் கிரைய சொத்தை மோசடியாக அடைவதற்கு நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/–சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.